**MCOP NO: 5757/2022 DATE:10.06.2024**

ம.சா.1

பெயா்.V. Murugan

த /பெ.E. Vinayagam

வயது. 53

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த மனுவில் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்தியபிரமாண வாக்குமூலம் ஏற்கன தாக்கல் செய்துள்ளேன், தற்சமையம் . என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 5 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**<u>1 ம் எதிா்மனுதாரா் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1 ம் எதிா்மனுதாரா் வாகனம் இந்த விபத்தில் ஈடுபட வில்லை என்றால் சாியல்ல. நானகவே அதி வேகமாக வாகனத்தை இயற்றி விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சாியல்ல. மசாஆ 2 ஆவணத்தின் படி நான் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனம் என்மீது விழுந்ததால் காயம் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி தொியாது. 1 ம் எதிா்மனுதாரா் எதிராக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்பதால் இந்த வழக்கில் 1 ம் மனுதாரா்ரை பொறுத்து தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சாியல்ல.

**<u>2 ம் எதிா்மனுதாரா் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

காவல் துறையில் இந்த விபத்து குறித்து எனது மகன் சந்தோஸ் என்வா் புகாா் கொடுத்தாா். அவா் 1 நாள் கால தாமதமாக புகாா் கொடுத்ததாா். விபத்தை என் மகன் நேரடியாக பாா்க்கவில்லை. எனது மகன் விபத்தை பாா்க்கதா நிலையில் 1 நாள் கால தாமதாமாக பின் யோசனை செய்து இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக 1 ம் எதிா்மனுதாரா் வாகனம் விபத்தில் ஈடுபட்டதாக பொய்யாக புகாா் கொடுத்துள்ளாா் என்றால் சாியல்ல. அதன் அடிப்படையில் நான் தாக்கல் செய்த மனுவிம் ஏற்புடையதல்ல என்றால் சாியல்ல. எனவே இந்த மனு 2 ம் எதிா்மனுதாரரை பொறுத்து அதிக செலவுகளுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சாியல்ல.

x

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவா் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.